# 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

*1.* சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதிகள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இதுவரையில் பேருந்துகள் ஓடப்படாத ஊரகப் பகுதிகளில் மற்றும் மலைப் பகுதிகளில் சிறிய பேருந்துகளை இயக்குபவர்களால் காலாண்டு ஒன்றுக்கு, இருக்கை ஒன்றுக்கு செலுத்தத்தக்க வரி வீதங்களை 1-10-2004 முதல் குறைத்து உள் (போக்குவரத்து-3) துறையின் 21-9-2004 ஆம் நாளிட்ட 1146 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*2.* கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள உலகச் சுகாதார நிறுவனத்தின் தேசிய இளம்பிள்ளை வாத நோய் கண்காணிப்புத் திட்டப் பிரிவின் கண்காணிப்பு மருத்துவ அதிகாரிகள் வைத்திருக்கும் வாகன என்ஜின் எண் DF 44 DD-26197 அடிச்சட்டம் எண் MAIPN 4D FC 42D —53162 மற்றும் என்ஜின் எண் DF 44D-26170 அடிச்சட்டம் எண் MAIPN 4DFC - 42D - 53117 ஆகிய இரண்டு வண்டிகளுக்கும் மேற்சொன்ன நிறுவனத்தின் கட்டுப்பாட்டின்கீழ், எவ்வளவு காலத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ, அக்கால அளவு முழுவதற்கும் அவ்விரு வண்டிகளின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்கு அளித்து உள் (போக்குவரத்து—1) துறையின் 2-6-2004ஆம் நாளிட்ட 845 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் உள் (போக்குவரத்து—1) துறையின் 29-7-2004 ஆம் நாளிட்ட 973 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட திருத்தம் குறித்த அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*3.* மதுரை, எப்பாதா மிஷனுக்குச் சொந்தமான TN-59 S-4260 என்கிற பதிவு எண் கொண்ட மோட்டார் வாகனம் (தனியார்

வாகனம்) ஐந்தாண்டு கால அளவுக்கு அல்லது இந்த வாகனம் மேற்சொன்ன நிறுவனத்திற்குச் சொந்தமாக இருக்கும் வரையில் எது முந்தையதோ அதுவரையிலும் மற்றும் அது வாடகை அல்லது வெகுமானத்தின் அடிப்படையில் இயக்கப்படாமல் மேற்சொன்ன நிறுவனத்தின் தொண்டு நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் வரையில் அவ்வாகனத்திற்குச் செலுத்தத்தக்க வரிவீதத்தைக் குறைத்து உள் (போக்குவரத்து—I) துறையின் 17-11-2004 ஆம் நாளிட்ட 1289 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. LF50—1124708 என்கிற அடிச்சட்டம் எண்ணும், 2L 5477661 என்கிற என்ஜின் எண்ணும் கொண்ட க்வாலிஸ் மோட்டார் வண்டிக்கு சென்னை, தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு செலுத்தத்தக்க ஆயுட்கால வரிவிதிப்பில் இருந்து விலக்களித்து உள் (போக்குவரத்து—I) துறையின் 5-11-2004ஆம் நாளிட்ட 1274 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. சென்னை, இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்திற்குச் சொந்தமான பாட்டரியால் இயங்குவதுமான பதினொன்று மோட்டார் வண்டிகளுக்கு அவை பாட்டரியால் இயக்கப்படுகின்ற வரை, 'பசுமை வரி' என்கிற கூடுதல் வரியைச் செலுத்துவதில் இருந்து விலக்களித்து உள் (போக்குவரத்து—I) துறையின் 20-10-2004 ஆம் நாளிட்ட 479 2D ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

6. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

[2005 பிப்ரவரி 2

*7. 2003-2004* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. *[1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*8. 2003-2004* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் முப்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. *[1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*9. 2002-2003* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. *[1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*1.* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். *(தமிழ், ஆங்கிலம்)*

*2. 2005* ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் *31* ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. *(தமிழ், ஆங்கிலம்)*

*3.* மனுக்கள் குழுவின் தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை. *(2003-2005)*

*4.* மனுக்கள் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை. *(2003-2005)*

*5.* மனுக்கள் குழுவின் தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. *(2003-2005)*

*6.* மனுக்கள் குழுவின் தொண்ணூற்று நான்காவது அறிக்கை. *(2003-2005)*